
# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 341 | 4 Pages | 3.7.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 341 | 4 பக்கங்கள் | 3.7.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# தமிழ் மொழியில் 100 சட்டப்புத்தகங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை, ஜூலை 3

கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தால் 100 சட்டங்களை புத்தக வடிவில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 37 மத்திய சட்டங்கள் மற்றும் 63 தமிழ்நாடு சட்டங்களில், 43 மறுமதிப்பு செய்யப்பட்ட சட்டங்கள், 20 புதிய பதிப்பு செய்யப்பட்ட சட்டங்கள் என மொத்தம் 100 சட்டப் புத்தகங்கள் பதிப்பிக்கப்பட்டன.



இந்த புத்தகங்களை வெளியிடும் நிகழ்ச்சி சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சட்டப்புத்தகங்களை வெளியிட்டார். இந்தநிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, தலைமை செயலாளர் சிவதாஸ் மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரை, கோவை மெட்ரோ ரெயில் திட்டம்: ஆசிய முதலீட்டு வங்கி குழு இன்று ஆய்வு

சென்னை,ஜூலை 3

சென்னை மெட்ரோ ரெயில் சேவையைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரெயில் சேவையைத் தொடங்க தமிழ்நாடு அரசு ஆயத்தமாகி வருகிறது. ரூ. 11,368 கோடியில் திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரை 32 கி.மீ. தொலைவுக்கு மதுரையில் மெட்ரோ ரெயில் திட்டம் தொடங்கப்பட உள்ளது. அதேபோல கோவையில் முதல்கட்டமாக அவிநாசி சாலை, சத்தி சாலை ஆகிய 2 வழித்தடங்களில் மொத்தம் 38 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.10,740 கோடி மெட்ரோ ரெயில் திட்டம் தொடங்கப்பட உள்ளது.



இந்நிலையில் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான நிதியை கடனாக வழங்க உள்ள பன்னாட்டு ஆசிய முதலீட்டு வங்கி பிரதிநிதிகள் குழு இன்று சென்னை வந்துள்ளது. அவர்கள் நாளை மதுரையிலும், நாளை மறுநாள் (வியாழக்கிழமை) கோவையிலும் மெட்ரோ ரயில் திட்டம் அமைய உள்ள வழித்தடங்களில் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். இதனைத் தொடர்ந்து வங்கி பிரதிநிதிகளின் நேரடி ஆய்வுக்குப் பிறகு, வரும் வெள்ளிக்கிழமை தமிழ்நாடு நிதித்துறை செயலாளரை சந்தித்தும் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

இதனிடையே மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தின் சாத்தியக்கூறு ஆய்வறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை மெட்ரோ ரெயில் நிறுவனம் அரசிடம் சமர்ப்பித்துள்ள நிலையில், விரைவில் தமிழ்நாடு அரசு மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தின் கட்டுமான பணிகளுக்கு ஒப்புதல் அளித்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கும்.

அதன் பிறகு மத்திய அரசும் இத்திட்டத்தை தொடங்க ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில், மதுரைமற்றும் கோவை மெட்ரோ திட்ட கட்டுமான பணிகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ நிறுவனம் மூலம் முறையாக டெண்டர் அறிவிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ குழுவினர் இலவச கண் பரிசோதனை முகாம்


திருவாரூர், ஜூலை 3

குடவாசல்மாபெரும் இலவச மருத்துவ முகாம் சுவாமி தயானந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்த முகாமை அக்கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் சொசைட்டி, சிவா மெடிக்கல் லேப், அமெரிக்க தெற்கு அலபாமா பல்கலைகழகம், திருத்துறைப்பூண்டி ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல், திருவாரூர் மெடிக்கல் சென்டர், அகர்வால் கண் மருத்துவமனை ஆகியோர் இணைந்து நடத்தினர். இந்த முகாமில் உடல் நிறை குறியீட்டு எண், இரத்தத்தில் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம், இரத்த பரிசோதனைகள், ஹீமோகுளோபின், இசிஜி, சிறுநீர் தொற்று பரிசோதனை, கண் பரிசோதனை போன்ற முழு உடல் பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக நடைபெற்றது.இந்த முகாமை அக்கல்லூரியின் தாளாளர் சீனிவாசன் தொடங்கி வைத்தார். பேராசிரியர் மற்றும் யூத் ரெட் கிராஸ் சொசைட்டி ஒருங்கிணைப்பாளர் ஏழுமலை அனைவரையும் வரவேற்றார். அமெரிக்க தெற்கு அலபாமா பல்கலைகழக பேராசிரியர்கள் டாக்டர் .பத்மமாலினி துளசிராமன், டாக்டர் நான்சி ஆயர்ஸ் ரைஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் ஹேமா மருத்துவ முகாமிற்கு தலைமை தாங்கினார். திருத்துறைப்பூண்டி ராய் ட்ரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத்தலைவரும்,ஐக்கிய நாட்டு சபையின் தன்னார்வலருமான முனைவர் துரை ராயப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த மாபெரும் இலவச முழு உடல் பரிசோதனை முகாமில் 800 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் கல்லூரி ஊழியர்கள், பேராசிரியர்கள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர். கலந்து கொண்ட பெரும்பாலான பயனாளிகளுக்கு மருந்து, மாத்திரை போன்றவை இலவசமாக வழங்கப்பட்டது. அமெரிக்கா தெற்கு அலபாமா பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் லெனல் யொன்னா ஆன்டர்சன், ரேய்ட் ஜோசப் குரோஜின், மௌரா விக்டோரியா ஹாக்கின்ஸ், கொன்னர் கிரிகோரி லெவிஸ், சுபாங்கி சிங், ஸாகம் அல்குதா கலந்து கொண்டு சிகிச்சையளிக்க உதவினர். மேலும் திருவாரூர் மெடிக்கல் சென்டர் மூத்த புற்று நோயியல் மருத்துவர் பிச்சையம்மாள், டாக்டர்.மோனிஷா, டாக்டர்.செல்வ கணபதி ஆகியோர் தலைமையிலான மருத்துவ குழு அனைவருக்கும் சிகிச்சை அளித்தனர், சிவா மெடிக்கல் லேப் ஊழியர்களான விஷ்ணுப்பிரியா, கலைச்செல்வி, ஜோஸ்பின் மேரி, பரணி, மருந்தாளுநர் சண்முகப்பிரியாஆகியோர்அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். அகர்வால் கண் மருத்துவமனை ராம்குமார் தலைமையிலானகுழுவினரும், ஆப்டோமெட்ரிஸ்ட் சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு கண் பரிசோதனை செய்தனர். இந்த முகாமை சிவா லேப் உரிமையாளர் பால சுந்தரம், சிவ சங்கர், மருத்துவர் அகிலா ஆகியோர் வழி நடத்தினார்கள்.



கல்லூரி நிர்வாகம் அனைவருக்கும் நன்றி கூற முகாம் சிறப்பாக நிறைவு பெற்றது. மேலும் இந்த குழுவினர் மூலம் ஏற்கெனவே அம்மையப்பன் சேவா யோகா முதியோர் இல்லத்தில் 60 முதியோருக்கு மருத்துவ பரிசோதனைகளும், அங்குள்ள குழந்தைகளுக்கு பரிசு பொருட்களும், அம்மையப்பன் ராம் டெக் தொழிற்சாலையில் பணிபுரியும் 45 தொழிலாளருக்கு முழு உடல் பரிசோதனையும், திருவாரூர் மாவட்ட வடகரைஉயர்நிலைபள்ளியில் படிக்க கூடிய 380 மாணவர்களுக்கு இரத்த வகை, சிறுநீர், கண் மருத்துவபரிசோதனைகள்செய்து அவர்களுக்கு பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விமானத்தில் ஏறிய சில நிமிடங்களில்... இந்திய இளம்பெண் திடீர் மரணம்



மெல்போர்ன், ஜூலை 3

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து டெல்லியை நோக்கி புறப்பட்ட குவாண்டாஸ் விமானத்தில் இந்திய வம்சாவளியைசேர்ந்த இளம்பெண்ணான மன்பிரீத் கவுர் (வயது 24) என்பவர் புறப்பட்டு உள்ளார்.

2020ம் ஆண்டு அந்நாட்டுக்கு சென்ற அவர், 4 ஆண்டுகளுக்கு பின்னர் முதன்முறையாக தன்னுடைய குடும்பத்தினரை பார்ப்பதற்காக இந்தியாவுக்கு புறப்பட்டு இருக்கிறார். அவர் விமானத்தில் ஏறுவதற்கு முன் உடல்நலம் பாதிக்கப்பட்டதுபோல் உணர்ந்திருக்கிறார்.

எனினும், விமானத்திற்குள் வந்த அவர், விமானம் புறப்படும் முன் அணிய கூடிய சீட் பெல்ட்டை அணிந்தபோது, மயங்கி சரிந்துள்ளார். அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்து உள்ளார்.

அப்போது விமானம் மெல்போர்னில் இருந்து புறப்பட தயாராக இருந்தது. இதுபற்றி தெரிய வந்ததும், உடனடியாக விமான ஊழியர்களும், அவசரகால பணியாளர்களும் உதவிக்காக ஓடி சென்றனர். அவருக்கு நுரையீரலில் ஏற்பட்ட தொற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து இருக்க கூடும் என நம்பப்படுகிறது.

சிறந்த சமையல் கலைஞராக வேண்டும் என்ற நோக்கங்களுடன் ஆஸ்திரேலியாவில் சமையல் கலையை படித்து வந்திருக்கிறார். கூடவே, வேலையும் செய்து வந்திருக்கிறார். அவருடைய உடலை இந்தியாவுக்கு கொண்டு வரும் பணிகள் நடந்து வருகின்றன.

## பிரான்சில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியதில் 3 பேர் பலி



பிரான்ஸ்தலைநகர்பாரீசில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அந்த விமானம் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் கொலெஜியன் நகரில் உள்ள நெடுஞ்சாலை அருகே விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் இருந்த 3 பேரும் உடல் சிதறி பலியாகினர்.

இதற்கிடையே கீழே விழுவதற்கு முன்பு அங்குள்ள மின்னழுத்த கம்பி மீது விமானம் உரசியதாக கூறப்படுகிறது. இதனால் பாதுகாப்பு கருதி அந்த நெடுஞ்சாலையில் சில மணி நேரம் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மேலும் விமான விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காசா: இஸ்ரேல் தாக்குதலில் 20 ஹமாஸ் பயங்கரவாதிகள் படுகொலை



இஸ்ரேல் மீது கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ந்தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணய கைதிகளாக சிறை பிடித்தும் சென்றது.

எனினும், போர்நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில், அவர்களில் சிலரை இஸ்ரேல் மீட்டது. மீதமுள்ளவர்களையும் மீட்போம் என சூளுரைத்து உள்ளது. ஹமாஸ் பயங்கரவாதிகளிடம் சிக்கியுள்ள 116 பணய கைதிகளில் 30 பேர் உயிரிழந்து விட்டனர் என நம்பப்படுகிறது.

இந்நிலையில், காசாவின் வடக்கே ஷெஜாயா நகரில் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதில், அவர்களில் பலர் கொல்லப்பட்டனர்.

தெற்கு காசாவின் ரபா நகரில், பீரங்கியை தாக்கி அழிக்கும் ஏவுகணையை வீசிய பயங்கரவாதியை ராணுவ வீரர்கள் வான்வழி தாக்குதல் நடத்தி கொன்றனர்.

இதேபோன்று மத்திய காசா பகுதியில் நெட்ஜரீம் என்ற இடத்தில், வீரர்கள் மீது ஏவுகணை வீசி தாக்குதல் நடத்திய பயங்கரவாதியை ஆளில்லா விமானம் உதவியுடன் வீரர்கள் சுட்டு கொன்றனர். மொத்தம் 20 பயங்கரவாதிகள் வரை படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

## பாகிஸ்தானில் தொடர் கனமழை: 8 பேர் பலி; 24 பேர் காயம்

பலூசிஸ்தான், ஜூலை 2

பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் பகுதியில் பெய்து வரும் தொடர் கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. இதில், சிக்கி 8 பேர் பலியானார்கள். 24 பேர் காயம் அடைந்து உள்ளனர். 300க்கும் மேற்பட்ட மண் வீடுகள் சேதமடைந்து உள்ளன.

இதேபோன்றுஷெரானிமாவட்டத்தில்தனசார்மற்றும்தேராஇஸ்மாயில் கான் பகுதிகளுக்கு இடையே நில சரிவு ஏற்பட்டது. இதனால், அந்த பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. குவெட்டா மற்றும் இஸ்லாமாபாத் நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையின் பெருமளவிலான பகுதியும் நில சரிவால் பாதிக்கப்பட்டன.

பயணிகளுக்கான பஸ்கள், கார்கள் மற்றும் சரக்குகளை ஏற்றி சென்ற லாரிகள் ஆகியன இரு புறங்களிலும் வரிசையாக நின்றன. இதனை தொடர்ந்து உள்ளூர் அரசு நிர்வாகம் உடனடியாக அந்த பகுதிகளுக்கு சென்று பெரிய கற்கள் மற்றும் சேறுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

# கைது நடவடிக்கை: மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்



ராமேசுவரம், ஜூலை 3

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், தங்கச்சிமடம், தொண்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்ற நிலையில் எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் 25 மீனவர்களை கைது செய்தனர். மேலும் அவர்களது 4 நாட்டுப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

எனவே இலங்கை கடற்படையை கண்டித்தும், கைதான மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கக்கோரியும், பாம்பன் வடக்கு கடல் பகுதியில் நேற்று நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பத்தினர் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், மீனவர்கள் மீதான கைது நடவடிக்கையை கண்டித்தும் தமிழக மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க வலியுறுத்தியும், பாரம்பரிய கடல் பகுதியில் இலங்கை கடற்படை பிரச்சினை இல்லாமல் மீனவர்கள் மீன பிடிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் வருகிற 5ந்தேதி பாம்பன் ரோடு பாலத்தில் மறியல் போராட்டம் நடத்துவது எனவும், பின்னர் அங்கிருந்து மீனவர்கள் அனைவரும் ஊர்வலமாக மண்டபம் ரெயில் நிலையம் சென்று 4 மணிக்கு மண்டபத்தில் இருந்து புறப்படும் சென்னை ரெயிலை மறித்து போராட்டம் நடத்துவது என்றும் ராமேசுவரம் தீவு அனைத்து மீனவ சமுதாய சங்கங்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பாம்பன், தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் இன்று முதல் மீன் பிடிக்க செல்லாமல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. 5ந்தேதி நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு கேட்டு புதுக்கோட்டை, நாகப்பட்டினம், ஜெகதாபட்டினம், கோட்டைப்பட்டினம் உள்பட தமிழகம் முழுவதும் உள்ள மீனவர்களை சந்திப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியீடு




சென்னை, ஜூலை 3

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்பட சிவில் சர்வீசஸ் பதவிகளில் வரும் காலி இடங்களுக்கு தகுதியானவர்களை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) தேர்வு செய்து வருகிறது. அந்தவகையில் முதல்நிலை, முதன்மை மற்றும் நேர்முகத் தேர்வுகள் மூலம் இந்த பதவிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள்.

அதன்படி, நடப்பாண்டில் மொத்தம் 1,056 பணியிடங்களுக்கான அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 14ந்தேதி யு.பி.எஸ்.சி. வெளியிட்டது. நாடு முழுவதும் சுமார் 9 லட்சத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்ததாக சொல்லப்பட்டது. முதல் நிலைத் தேர்வு கடந்த மே மாதம் 26ந்தேதி நடைபெறுவதாக இருந்த நிலையில், தேர்தலை கருத்தில் கொண்டு ஜூன் 16ந்தேதிக்கு மாற்றப்பட்டது.

அந்த வகையில், முதல் நிலைத் தேர்வு கடந்த மாதம் (ஜூன்) 16ந்தேதி நாடு முழுவதும் 79 நகரங்களிலும், தமிழ்நாட்டை பொறுத்தவரையில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய 5 நகரங்களிலும் நடைபெற்றது.

இந்நிலையில் சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு முடிவுகளை யு.பி.எஸ்.சி. இன்று வெளியிட்டுள்ளது. தேர்வு எழுதிய தேர்வர்கள் https://upsc.gov.in என்ற இணையதளத்தில் சென்று தேர்ச்சி பெற்றுள்ளதை தெரிந்து கொள்ளலாம் என யு.பி.எஸ்.சி. அறிவித்துள்ளது.

இந்த தேர்வு முடிவில் நாடு முழுவதும் எழுதியவர்களில், 14 ஆயிரத்து 627 பேர் தேர்ச்சி பெற்றிருப்பதாக, வெற்றி பெற்றவர்களின் பட்டியலையும் யு.பி.எஸ்.சி. இணையதளத்தில் வெளியிட்டு இருக்கிறது.

முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு அடுத்தகட்டமாக முதன்மைத் தேர்வு வருகிற செப்டம்பர் 20ந்தேதி தொடங்குகிறது.

# தஞ்சையில் என்.ஐ.ஏ.வால் கைது செய்யப்பட்ட 2 பேருக்கு 5ந்தேதி வரை காவல்




சென்னை, ஜூலை 1

பயங்கரவாத அமைப்புகளுக்கு இளைஞர்களை சேர்த்தது தொடர்பாக சென்னை, தஞ்சை, ஈரோடு உள்ளிட்ட 10 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். தஞ்சாவூரில் 'ஹிஷாப் உத்தகீர்' என்ற தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்துடன் தொடா்புடையவா்கள் என கருதப்படும் 4 பேரின் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் 5 மணி நேரத்திற்கு மேலாக சோதனை செய்து செல்போன்கள், ஹாா்ட் டிஸ்க்குகள், பென் டிரைவ்கள், சில புத்தகங்கள் உள்ளிட்டவற்றை கைப்பற்றினா். இதைத்தொடா்ந்து அப்துல் ரகுமான் (வயது 22), முஜிபுா் ரகுமான் (46), ஆகிய இருவரையும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தனா்.

பின்னர் பூந்தமல்லியில் உள்ள தேசிய புலனாய்வு சிறப்பு கோர்ட்டில் ஆஜர் படுத்த வேண்டி, நேற்று முன்தினம் இரவு சைதாப்பேட்டையில் உள்ள நீதிபதியின் வீட்டிற்கு சென்று நீதிபதி இளவழகன் முன்பு கைது செய்யபட்ட 2 பேரையும் ஆஜர்படுத்தினர். இதையடுத்து 5ந்தேதி வரை அவர்களை நீதிமன்ற காவலில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். பலத்த போலீஸ் பாதுகாப்புடன் இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயில் மோதி இரு வாலிபர்கள் பலி



திருப்பூர், ஜூலை 3

திருப்பூர் காலேஜ் ரோடு சலவைப்பட்டறை அருகே ரெயில் தண்டவாளத்தில் ரெயிலில் அடிபட்டு 2 வாலிபர்கள் இறந்து கிடந்தனர். இதை பார்த்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக இதுகுறித்து திருப்பூர் ரெயில்வே போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். இதைத் தொடர்ந்து ரெயில்வே போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில், ரெயிலில் அடிபட்டு இறந்தவர்கள் திருவாரூர் மாவட்டம் குடவாசல் பகுதியை சேர்ந்த ராஜ்குமார்(வயது 28), அதே ஊரை சேர்ந்த சரவணபவா(27) என்பதும், இவர்கள் இருவரும் திருப்பூர் அருகே காவிலிபாளையம் புதூரில் தங்கியிருந்து கட்டிட வேலை செய்து வந்ததும், நேற்று அதிகாலை டீக்கடைக்கு வந்து டீ குடித்து விட்டு, காலைக்கடன் கழிக்க சென்ற இவர்கள் தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயிலில் அடிபட்டு இறந்தது தெரியவந்தது.

இதுதொடர்பாக திருப்பூர் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ரெயிலில் அடிபட்டு வாலிபர்கள் 2 பேர் பலியான சம்பவம் பெரும் அந்த பகுதியில் பரிதாபத்தைஏற்படுத்தியுள்ளது.

# எச்சில் துப்பியதால் தகராறு: தொழிலாளியை ஓடும் ரெயிலில் இருந்து கீழே தள்ளிய வாலிபர்



திருச்சி, ஜூலை 3

கடலூர் மாவட்டம் மேல்புவனகிரி கோட்டை மேட்டுத்தெருவை சேர்ந்தவர் விஸ்வநாதன் (வயது 25). இவர் பழனியில் உள்ள கட்டுமான நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவர் சம்பவத்தன்று தனது நண்பர் சந்திரசேகர் என்பவருடன் மதுரையில் இருந்து கொல்லம் விரைவு ரெயிலில் முன்பதிவு இல்லாத பெட்டியில் ஏறியுள்ளார். ரெயிலில் கூட்டம் அதிகம் இருந்ததால் இருவரும் ரெயில் பெட்டியின் படிக்கட்டில் அமர்ந்து பயணம் செய்து வந்தனர். அந்த ரெயில் திண்டுக்கல் ரெயில் நிலையத்துக்கு வந்த போது, அதே பெட்டியில் மதுரை மாவட்டம் நத்தம் மெயின் ரோடு ஊமச்சிக்குளத்தை சேர்ந்த வேலு (35) ஏறினார்.

அவர், விஸ்வநாதன், சந்திரசேகர் ஆகியோருக்கு பின்னால் படியின் அருகில் நின்று கொண்டு பயணம் செய்தார். கல்பட்டி சத்திரத்தை கடந்து இரவு 8.20 மணியளவில் ரெயில் வந்து கொண்டிருந்த போது, வேலு ரெயிலுக்கு வெளியே எச்சில் துப்பியுள்ளார். அது விஸ்வநாதன் மீது படவே, அவர் வேலுவிடம் தட்டிக் கேட்டுள்ளார்.

இதனால் இருவருக்கும் தகராறு ஏற்படவே, ஆத்திரமடைந்த வேலு, ஓடும் ரெயிலில் இருந்து விஸ்வநாதனை எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். இதில் அவர் கீழே விழுந்து தலையில் பலத்தகாயம் ஏற்பட்டது. மேலும் ரெயிலில் இருந்த சந்திரசேகர் மற்றும் சக பயணிகள் ரெயில்வே போலீசுக்கு தகவல் கொடுத்தனர்.

இதனால் தான் மாட்டிக்கொள்வோம் என்று பயந்த வேலு, ரெயில் கண்ணுடையான்பட்டிஅருகே வந்த போது, அவரும் ஓடும் ரெயிலில் இருந்து கீழே குதித்தார். இதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற திருச்சி ரெயில்வே போலீசார், விஸ்வநாதனை மீட்டு திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கும், வேலுவை மீட்டு மணப்பாறை அரசு ஆஸ்பத்திரிக்கும் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர்.

பின்னர், வேலு மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து விஸ்வநாதன் கொடுத்த புகாரின் பேரில் வேலு மீது கொலை முயற்சி பிரிவின் கீழ் திருச்சி ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் மோகனசுந்தரி மேற்பார்வையில் சப்இன்ஸ்பெக்டர் லூர்துசேகர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும், வேலு மீது ரெயிலில் இருந்து குதித்தது தொடர்பாகவும் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# பெரியார் பல்கலை., துணைவேந்தர் விவகாரம்; மாணவர்களின் கல்வியில் அரசியல் செய்ய வேண்டாம்: செல்வப்பெருந்தகை



சென்னை, ஜூலை 3

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை ஐகோர்ட்டில் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ள, அரசு செயலர் விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட பெரியார் பல்கலைக்கழகத் துணை வேந்தருக்கு, கவர்னர் ஓராண்டு பதவி நீட்டிப்பு வழங்கி இருப்பது உயர் கல்வியின் மாண்புக்கும், மரபுக்கும் எதிரானதாகும். எனவே அந்த பணி நீட்டிப்பை கவர்னர் உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

அவருக்குபணிநீட்டிப்பு வழங்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது. துணைவேந்தரின் பணி நீட்டிப்பை ரத்து செய்ய வேண்டும். அப்போது தான் பல்கலைக்கழகத்தின் மாண்பும், துணை வேந்தர் பதவிக்கான பெருமையும் நிலைக்கும்.

உயர்கல்வித்துறை அமைச்சரின் சட்டமன்ற அறிவிப்புக்கு சவால் விடும் வண்ணம் இந்த பணி நீட்டிப்பை கவர்னர் வழங்கி இருப்பதாக கருதுகிறோம். மாணவர்களின் கல்வியில் அரசியல் செய்ய வேண்டாம் என கவர்னரை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்

# சாதிவாரி கணக்கெடுப்பு: மத்திய அரசை பா.ம.க. தான் வலியுறுத்த வேண்டுமானால் தி.மு.க.வுக்கு ஆட்சி எதற்கு? ராமதாஸ்



சென்னை, ஜூலை 3

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சாதிவாரி விவரங்கள் வேண்டும் என்று என்று பாட்டாளி மக்கள் கட்சி விரும்பினால், 2021ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்தும்படி கூட்டணி கட்சியான பாரதிய ஜனதாவை பாட்டாளி மக்கள் கட்சி தான் வலியுறுத்த வேண்டும் என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கூறியிருக்கிறார். தமிழ்நாட்டின் சமூகநீதியை காப்பதில் தி.மு.க. அரசின் கையாலாகாத தனத்தையே அமைச்சரின் கருத்து காட்டுகிறது.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு தேசிய அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு. இதற்காக 2008ம் ஆண்டில் 150க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களவை உறுப்பினர்களின் கையெழுத்துகளை வாங்கி அன்புமணி ராமதாஸ் தலைமையிலான குழுவினர் அப்போதைய உள்துறை மந்திரி சிவ்ராஜ் பாட்டீலிடம் ஒப்படைத்தது, மக்களவையில் தொடர்ந்துகுரல்கொடுத்து சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மத்தியஅரசைஒப்புக்கொள்ள வைத்தது போன்ற வரலாறுகள் எல்லாம் அந்த ஆட்சியில் தி.மு.க. சார்பில் மத்திய உள்துறை இணை மந்திரியாகவும், சுற்றுச்சூழல்துறைஇணை மந்திரியாகவும், பதவி வகித்த ரகுபதி போன்றவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவருக்கும் சமூகநீதிக்கும் என்ன சம்பந்தம்?

தமிழ்நாட்டில் சமூகநீதியைக் காக்க சாதிவாரி கணக்கெடுப்பு தேவை. அதற்காக மத்திய அரசை பாட்டாளி மக்கள் கட்சி தான் வலியுறுத்த வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் தி.மு.க. ஏன் ஆட்சியில் இருக்க வேண்டும்? பதவி விலகி விடலாமே? நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. அணிக்கு 39 உறுப்பினர்கள் எதற்கு? அவர்களும் பதவி விலகி விடலாமே? அதிகாரத்தை சுவைப்பதற்கு மட்டும் தான் தி.மு.க.வுக்கு மக்கள் வாக்களித்தார்களா?

தமிழ்நாட்டில் சமூக நீதியைக் காக்க வேண்டியது தமிழக அரசின் கடமை. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டியது தமிழக அரசின் கடமை. அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது. அதை நீதிமன்றங்களும் உறுதி செய்துள்ளன. இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி கடமையை செய்ய திறனற்ற தி.மு.க. அரசு, மத்திய அரசு தான் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று போகாத ஊருக்கு வழி காட்டக் கூடாது.

பீகார், கர்நாடகா, ஒடிசா, ஆந்திரா, தெலுங்கானா, ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்கள், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு தான் நடத்த வேண்டும் என்று தட்டிக்கழிக்கவில்லை. அந்த அரசுகளே 2008ம் ஆண்டின் புள்ளிவிவர சேகரிப்பு சட்டத்தைப் பயன்படுத்தி கணக்கெடுப்பு நடத்தியுள்ளன. அதே வழியில் பயணிக்க தமிழக அரசுக்கு என்ன தயக்கம்? தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாட்டோம், சமூக நீதி வழங்க மாட்டோம் என்பது தான் தமிழக அரசின் கொள்கை என்றால் அதை வெளிப்படையாக அறிவித்து விடுங்கள்.

தமிழ்நாட்டின் சட்ட அமைச்சராக இருக்கும் ரகுபதி தமக்குத் தெரிந்த சட்ட அறிவை பயன்படுத்தி, மனசாட்சிக்கு அஞ்சி தமிழக அரசுக்கு சரியான ஆலோசனைகளை வழங்க வேண்டும். அதை விடுத்துதி.மு.க.தலைமை சொல்லிக் கொடுத்ததையே கிளிப்பிள்ளை போல மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மருங்கூரில் ராஜராஜன் காலச் செம்பு நாணயம் கண்டெடுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்




கடலூர், ஜூலை 3

கடலூர் மாவட்டம் மருங்கூரில் நடைபெற்று வரும் அகழாய்வில் ராஜராஜ சோழன் காலச் செம்பு நாணயம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "கடலூர் மாவட்டம், மருங்கூரில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் ராஜராஜன் காலச் செம்பு நாணயம் கண்டறியப்பட்டுள்ளது. இந்நாணயம் 23.3 மி.மீ விட்டமும் 2.5 மி.மீ தடிமனும் 3 கிராம் எடையும் கொண்டது" என்று தெரிவித்துள்ளார்.

# மதுரையில் அண்ணன் தம்பி வெட்டிக் கொலை 8 பேர் கும்பல் வெறிச்செயல்



காளையார்கோவில், ஜூலை 3

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா நாச்சிகுளம் சரவணா நகரை சேர்ந்த ஆண்டிச்சாமி என்பவரது மகன்கள் ஜெயசூர்யா(23), சுபாஷ்(23) இவர்கள் இருவரும் இரட்டையர்கள் ஆவார்கள். பட்டதாரிகளான இவர்கள் இருவரும் மஞ்சுவிரட்டு, மற்றும் ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்க செய்யும் வகையில் மாடுகளை வளர்த்து, உரிய பயிற்சியும் அளித்து வந்தனர். இந்த நிலையில் சகோதரர்கள் இருவரும் தங்களது நண்பர்களான அரண்மனை சிறுவயல் கிராமத்தைச் சேர்ந்த வல்லவன் மகன் ராஜேஷ்(19), சாத்தரசன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிவாஜி மகன் நவீன்(19), கிளுவச்சி கிராமத்தைச் சேர்ந்த முத்துமணி மகன் அஜய்(20) ஆகியோருடன் சேர்ந்து சிவகங்கை மாவட்டத்திற்குள் நடைபெறும் மஞ்சு விரட்டு போட்டிகளில் பங்கேற்று வந்துள்ளனர்.

அப்போது அவர்கள் தங்கள் மாடுகளை முதலில் அவிழ்த்து விடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். இந்த நிலையில், கடந்த 12 ஆம் தேதி பனங்குடி கோவில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற மஞ்சு விரட்டில் தங்களது மாடுகளை சகோதரர்கள் அவிழ்த்து விட்டனர்.

அப்போது, அந்த மாடுகளை சிவகங்கை அருகே புதுப்பட்டியைச் சேர்ந்த சக்தி என்பவர் மகன் மதன்(20) மற்றும் அவனது நண்பர்கள் மாட்டை பிடித்ததாகவும் இதில் இரு தரப்பினரிடையே வாய் தகராறு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டதாகவும் கூறப்படுகிறது. இந்த முன்விரோதம் காரணமாக நேற்று இரவு 10 மணியளவில் மதன் மற்றும் அவரது நண்பர்கள் எட்டு பேரும் மூன்று இருசக்கர வாகனங்களில் சென்று ஜெயசூர்யா மற்றும் சுபாஷ் ஆகிய இருவரையும் சரமாரியாக வெட்டி கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

மற்ற மூன்று பேரையும் தாக்க முற்படும்போது மூவரும் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார், தப்பி ஓடிய கொலையாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர். கொலை செய்யப்பட்ட ஜெயசூர்யா,சுபாஷ் மற்றும் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட மதன் ஆகியோர் மீது ஏற்கனவே கொலை வழக்கு நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ராகுல் காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும்: அண்ணாமலை வலியுறுத்தல்





சென்னை, ஜூலை 3

மக்களவையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் இன்று நடைபெற்றது. அப்போது பேசிய காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, பா.ஜனதா மற்றும் ஆர்.எஸ்.எஸ். மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். பா.ஜனதாவினர் உண்மையான இந்துக்கள் இல்லை என்று கூறிய ராகுல் காந்தி, பா.ஜனதாவினர் வன்முறை செய்பவர்கள் என்றும் அவர்கள் இந்துக்களின் ஒட்டுமொத்த பிரதிநிதிகள் இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்து மதம் என்பது பயம், வெறுப்பு, பொய்களைப் பரப்பும் மதம் இல்லை என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார். அப்போது யாரும் எதிர்பார்க்காத வகையில் பிரதமர் மோடியே எழுந்து ராகுல் காந்தி பேச்சைக் குறுக்கிட்டார். ராகுல் காந்தி பேச்சு இந்துக்கள் மீதான தாக்குதல் என பிரதமர் மோடி எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்துக்களை வன்முறையாளர்கள் என்று கூறியதற்கு ராகுல் காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "எப்பொழுதும் போல, தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ்கட்சிதனது உண்மை நிலையை அம்பலப்படுத்தி வருகிறது. கடந்த வாரம் செங்கோல் விவகாரம், இன்று சிறுபான்மையினரை திருப்திபடுத்தும் வழியை இந்தியா கூட்டணி வெகுதூரம் கொண்டு சென்றுள்ளது.

இன்று நாடாளுமன்றத்தில் இந்துக்களை வன்முறையாளர்கள் என்று கூறியதற்கு ராகுல் காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும். இது போன்ற இழிவான கருத்துக்களால் இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தொடர்ந்து அவமதிக்கப்படுகின்றனர். எந்த அளவு தோல்வியும் இந்தியா கூட்டணியின் ஈகோவை அடக்கிவிடாது" என்று தெரிவித்துள்ளார்.

# சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியீடு

சென்னை, ஜூலை 3

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்பட சிவில் சர்வீஸ் பதவிகளில் வரும் காலி இடங்களுக்கு தகுதியானவர்களை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) தேர்வு செய்து வருகிறது. அந்தவகையில் முதல்நிலை, முதன்மை மற்றும் நேர்முகத் தேர்வுகள் மூலம் இந்த பதவிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள்.

அதன்படி, நடப்பாண்டில் மொத்தம் 1,056 பணியிடங்களுக்கான அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 14ந்தேதி யு.பி.எஸ்.சி. வெளியிட்டது. நாடு முழுவதும் சுமார் 9 லட்சத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்ததாக சொல்லப்பட்டது. முதல்நிலைத் தேர்வு கடந்த மே மாதம் 26ந்தேதி நடைபெறுவதாக இருந்த நிலையில், தேர்தலை கருத்தில் கொண்டு ஜூன் 16ந்தேதிக்கு மாற்றப்பட்டது.

அந்த வகையில், முதல்நிலைத் தேர்வு கடந்த மாதம் (ஜூன்) 16ந்தேதி நாடு முழுவதும் 79 நகரங்களிலும், தமிழ்நாட்டை பொறுத்தவரையில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய 5 நகரங்களிலும் நடைபெற்றது. சுமார் 9 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், அவர்களில் சுமார் 6 லட்சத்துக்கு மேற்பட்டோர் எழுதியதாக தகவல்கள் வெளியாகின.

தேர்வு முடிந்து 14 நாட்கள் கடந்த நிலையில், நேற்று இரவு தேர்வு முடிவை யு.பி.எஸ்.சி. வெளியிட்டு இருக்கிறது.

தேர்வு எழுதிய தேர்வர்கள் https://upsc.gov.in என்ற இணையதளத்தில் சென்று தேர்ச்சி பெற்றுள்ளதை தெரிந்து கொள்ளலாம் என யு.பி.எஸ்.சி. அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு (2023) சிவில் சர்வீஸ் தேர்வு முடிவு, தேர்வு முடிந்த 16 நாட்களுக்கு பின் வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு அதனைவிட முன்கூட்டியே தேர்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்வு முடிவில் நாடு முழுவதும் எழுதியவர்களில், 14 ஆயிரத்து 627 பேர் தேர்ச்சி பெற்றிருப்பதாக, வெற்றி பெற்றவர்களின் பட்டியலையும் யு.பி.எஸ்.சி. இணையதளத்தில் வெளியிட்டு இருக்கிறது.

இவர்களில் மனிதநேயம் பயிற்சி மையத்தில் படித்த 42 பேர் வெற்றி பெற்று இருப்பதாக பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயரும், மனிதநேய அறக்கட்டளை தலைவருமான சைதை துரைசாமி தெரிவித்தார்.

முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு அடுத்தகட்டமாக முதன்மைத் தேர்வு வருகிற செப்டம்பர் 20ந்தேதி தொடங்குகிறது. அந்த தேர்வுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான தகவல்கள் விரைவில் யு.பி.எஸ்.சி. வெளியிட உள்ளது. அந்த தேர்விலும் தேர்ச்சி பெறுபவர்கள் அதனைத் தொடர்ந்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

# ரெயில்வே அட்டவணையில் மாற்றமில்லை அதிகாரிகள் தகவல்

சென்னை, ஜூலை 3

ரெயில்வேயில் ஆண்டுதோறும் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதம் எக்ஸ்பிரஸ் ரெயில்கள், பயணிகள் ரெயிலுக்கான கால அட்டவணை வெளியிடப்படும். இந்த அட்டவணையில் புதிய ரெயில்களின் இயக்கம், கூடுதல் ரெயில் நிறுத்தம், ரெயில்கள் இயங்கும் நேரம் உள்ளிட்ட தகவல்கள் இடம்பெறும்.

இந்த நிலையில், புதிய ரெயில்வே அட்டவணை அடுத்த ஆண்டு (2025) ஜனவரி 1ந் தேதி வெளியிடப்படும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சில நிர்வாக காரணங்களுக்காக நீட்டிக்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பு அனைத்து பொது மேலாளர்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது. எனவே டிசம்பர் 31ந் தேதி வரை பழைய ரெயில்வே அட்டவணை பின்பற்றப்படும் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதே போல, புதிதாக வர இருக்கிற அட்டவணைக்கு தென்மாவட்ட மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் கடும் கூட்ட நெரிசலுடன் செல்வதால் பயணிகள் மிகவும் அவதியடைந்து வருகின்றனர்.

புதிய அட்டவணை மூலம் தென்மாவட்டங்களுக்கு கூடுதல் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜூன் மாதத்தில் 84.33 லட்சம் பேர் சென்னை மெட்ரோ ரெயிலில் பயணம்: நிர்வாகம் தகவல்



சென்னை, ஜூலை 3

கடந்த ஜூன் மாதத்தில் 84.33 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளதாக சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ ரெயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பகத்தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் கடந்த மாதம் சென்னை மெட்ரோ ரெயில்களில் 84,33,837 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

01.01.2024 முதல் 31.01.2024 வரை மொத்தம் 84,63,384 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். 01.02.2024 முதல் 29.02.2024 வரை மொத்தம் 86,15,008 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். 01.03.2024 முதல் 31.03.2024 வரை மொத்தம் 86,82,457 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். 01.04.2024 முதல் 30.04.2024 வரை மொத்தம் 80,87,712 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். 01.05.2024 முதல் 30.05.2024 வரை மொத்தம் 84,21,072 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். அதிகபட்சமாக 21.06.2024 அன்று 3,27,110 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2024, ஜூன் மாதத்தில் மட்டும் கியு.ஆர். குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 37,05,316 பயணிகள் (Online QR 1,86,140; Static QR 2,55,839; Paper QR 21,30,806; Paytm 4,06,230; Whatsapp 4,33,352; PhonePe – 2,72,300; ONDC – 20,649), பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 31,33,011 பயணிகள், டோக்கன்களை பயன்படுத்தி 30,752 பயணிகள், குழு பயணச்சீட்டு (Group Ticket) முறையை பயன்படுத்தி 3,757 பயணிகள் மற்றும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 15,61,001 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயில்களில் பயணிப்பவர்களுக்கு கியு.ஆர். குறியீடு (QR Code) பயணச்சீட்டு, பயண அட்டைகள் (Travel Card), வாட்ஸ்அப் டிக்கெட், Paytm App மற்றும் PhonePe போன்ற அனைத்து வகையான பயணச்சீட்டுகளுக்கும் 20% கட்டணத் தள்ளுபடி வழங்குகிறது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் வாட்ஸ்அப் டிக்கெட் (+91 83000 86000) மூலமாகவும் மற்றும் Paytm App மூலமாகவும் பயணிகள் தங்கள் பயணச்சீட்டுகளை பெற்று கொள்ளலாம்.

மெட்ரோ ரெயில்கள் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிடமாற்றம்




சென்னை, ஜூலை 3

முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில்,

தமிழக அரசின் மருத்துவத் துறை செயலாளராக இருந்த ககன்தீப் சிங் ஊரக வளர்ச்சித் துறை செயலாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வனத்துறை செயலாளராக இருந்த சுப்ரியா சாகு மருத்துவத் துறை செயலாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளராக இருந்த பிரதீப் யாதவ் உயர்கல்வித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா, இந்து அறநிலையத்துறை மற்றும் கலாசாரத் துறை முதன்மைச் செயலாளராக சந்திரமோகன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக கே.மணிவாசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சமூகப் பாதுகாப்புத் திட்டச் செயலாளராக ஜான் லூயிஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பொதுப் பணித்துறை செயலாளராக மங்கத் ராம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர்வளத்துறை செயலாளராக இருந்த சந்தீப் சக்சேனா, செய்தி மற்றும் காகிதத் துறை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வனத்துறை முதன்மைச் செயலாளராக செந்தில் குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நெடுஞ்சாலைத் துறை செயலாளராக செல்வராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதியின் இயக்குநராக விஜயலட்சுமி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காப்பகங்கள் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையராக வெங்கடாச்சலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நில சீர்திருத்த ஆணையராக ஹரிஹரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

போக்குவரத்துத் துறை சிறப்பு செயலாளராக லில்லி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி




சென்னை, ஜூலை 3

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, தற்போது ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்திருக்கும் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ராக்கெட்களை ஏவி வருகிறது. இந்த சூழலில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே அமைந்துள்ள குலசேகரப்பட்டினத்தில் இஸ்ரோவின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஊர், புவி வட்டப் பாதைக்கு மிக அருகிலும், ராக்கெட் ஏவுதளம் இயங்க தட்பவெப்ப சூழல் சாதகமாகவும் உள்ளதாக கண்டறியப்பட்டது. இதையடுத்து, குலசேகரபட்டினம் அருகில் உள்ள கூடல் நகர் அமராபுரம், மணப்பாடு, மாதவன்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களில் 2,230 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டது. இதையடுத்து குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைக்க பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

இந்தநிலையில், குலசேகரப்பட்டினத்தில் எஸ்.எஸ்.எல்.வி. ராக்கெட் ஏவுதளம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சேவை மையம், ராக்கெட் ஏவுதளம், ஏவுதள அடித்தளக் கட்டமைப்பு போன்றவற்றை அமைக்க ஒப்பந்தம்; சுமார் ரூ.20 கோடியில் கட்டமைப்புகளை மேம்படுத்த 22 நாட்களில் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# காகிதக் குடுவையில் 90 மி.லி. மது விற்கும் திட்டம் அரசுக்கு அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, ஜூலை 3

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கள்ளச்சாராய சாவுகளைத் தடுக்கும் நோக்கத்துடன் 90 மி.லி. மதுவை காகிதக் குடுவைகளில் அடைத்து விற்பனை செய்ய டாஸ்மாக் நிறுவனம் முடிவு செய்திருப்பதாகவும், இதற்கான கருத்துரு தமிழக அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் ஆங்கில நாளிதழில் வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. தமிழக அரசின் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், தமிழ்நாடு மீட்டெடுக்க முடியாத கலாச்சார சீரழிவு படுகுழிக்குள் தள்ளப்பட்டு விடும்.

காகிதக் குடுவைகளில் 90 மி.லி. மதுவை விற்பனை செய்வதற்காக டாஸ்மாக் நிறுவனம் முன்வைக்கும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. டாஸ்மாக் கடைகளில் குறைந்த அளவாக 180 மி.லி. மது மட்டுமே கிடைப்பதாகவும், அதன் குறைந்தபட்ச விலை ரூ.140 என்பதால், அவ்வளவு பணம் கொடுத்து டாஸ்மாக் மதுவை வாங்கிக்குடிக்கமுடியாதவர்கள் தான் குறைந்த விலையில் கிடைக்கும் கள்ளச்சாராயத்தை வாங்கிக் குடிக்கிறார்கள் என்றும், குறைந்த விலையில் டாஸ்மாக் நிறுவனமே மதுவை விற்பனை செய்வதன் மூலம் கள்ளச்சாராயத்தை தடுக்கலாம் என்று டாஸ்மாக் தரப்பில் கூறப்படுகிறது. இதை விட மிக மோசமான வாதம் இருக்க முடியாது.

இதே டாஸ்மாக் நிறுவனம் கடந்த ஆண்டு 90 மி.லி. மதுவை காகிதக் குடுவைகளில் அடைத்து விற்கும் திட்டத்தை அறிமுகம் செய்யத் துடித்தது. அப்போது பாட்டாளி மக்கள் கட்சி கடுமையான எதிர்ப்பு தெரிவித்ததால் அத்திட்டம் கைவிடப்பட்டது. அப்போது மது அருந்துபவர்கள் காலியான மதுப்புட்டிகளை கண்ட இடங்களில் வீசுவதால் சுற்றுச்சூழலுக்கும், விலங்குகளுக்கும் கடுமையான பாதிப்புகளும், ஆபத்துகளும் ஏற்படுவதாகவும், அதைத் தடுக்கவே காகிதக் குடுவைகளில் மதுவை அடைத்து விற்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசின் நிலைப்பாடுகளில் இருந்து ஓர் உண்மை தெளிவாக புரிகிறது. எப்படியாவது 90 மி.லி. காகிதக் குடுவை மதுவை தமிழகத்தில் அறிமுகப்படுத்தி, மதுவை ஆறாக ஓட விட வேண்டும் என்பது தான் அரசின் நோக்கமாகும். அதற்காக கடந்த ஆண்டு இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை காரணமாகக் காட்டிய தமிழக அரசு, இப்போது கள்ளச்சாராய விற்பனையை காரணமாக காட்டுகிறது. தமிழக அரசின் இந்த நோக்கம் தீமையானது. காகிதக் குடுவைகளில் 90 மி.லி. மது அறிமுகம் செய்யப்பட்டால் அது தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டின் இளைய சமுதாயத்தையும் சீரழித்து விடும்.

காகிதக் குடுவைகளில் விற்கப்படும் மது, மில்க்கேக், பழச்சாறுகள் போன்றவற்றைப் போலவே தோற்றமளிக்கக்கூடியது என்பதால் சிறுவர்களோ, மாணவர்களோ காகிதக் குடுவைகளில் மது அருந்தினால் கூட அதை மற்றவர்களால் எளிதாக கண்டுபிடிக்க முடியாது. அதனால், 90 மி.லி. மது அறிமுகம் செய்யப்படுவது மிகப்பெரிய சமூக சீரழிவை ஏற்படுத்தி விடும். இம்முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டும்.

தமிழ்நாட்டில் ஒரு மாணவன் 2 கி.மீ தொலைவில் உள்ள பள்ளிக்கு செல்ல வேண்டும் என்றால் குறைந்தது 2 அல்லது 3 டாஸ்மாக் மதுக்கடைகளை கடந்து தான் செல்ல வேண்டும். அதனால் தான் மாணவர்கள் மிகவும் எளிதாக மதுவை வாங்கிவகுப்புகளில் வைத்து குடிக்கும் நிலை உருவாகியுள்ளது. இப்போது காகிதக் குடுவைகளில் மது அறிமுகம் செய்யப்பட்டு, குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டால், அதை மாணவர்களும், சிறுவர்களும் மிகவும் எளிதாக வாங்கி, வீட்டில் இருந்து எடுத்துச் செல்லும் நொறுக்குத் தீனிகளைப் போல புத்தகப் பைகளில் வைத்து எடுத்துச் செல்லும் நிலை உருவாகி விடும்.

மது தீண்டத் தகாத பொருள் என்ற தயக்கம் உடைக்கப்பட்டு, அதுவும் ஒரு குளிர்பானம் என்ற எண்ணம் உருவாகிவிடும். அனைவரும் தங்களின் சட்டைப் பைகள் மற்றும் பெண்கள் பைகளில் காகித மதுக் குடுவைகளை வைத்து எடுத்துச் செல்வதும், பேருந்து, தொடர்வண்டி, திரையரங்கம் உள்ளிட்ட பொது இடங்களில் வைத்து குடிப்பதும் சர்வ சாதாரணமாகி விடும். இது அடுத்த தலைமுறைக்கு அரசு செய்யும் பெருந்துரோகம் ஆகும். இனி வரும் தலைமுறைகள் சீரழிவதற்கு இதுவே காரணமாகி விடும்.

உடலுக்கு கேடு விளைவிக்கும் எந்த பொருளையும் எளிதாக வாங்கும் வகையில் குறைந்த விலையிலோ, குறைந்த அளவிலோ விற்கக் கூடாது என்பது தான் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரை ஆகும். 90 மி.லி. அளவில் காகிதக் குடுவைகளில் மது விற்பனை செய்வதற்கும் இந்த வாதம் பொருந்தும். 90 மி.லி. காகிதக்குடுவை மது ரூ.70 என்ற அளவில் விற்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. ரூ.70 என்பது மிகவும் எளிதாக திரட்டப்படக்கூடியது. புகையிலைப் பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்படுவதை தடுக்க, அதன் மீது அதிக அளவில் பாவ வரிகளை விதித்து விலையை உயர்த்த வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. அதேபோல், மதுவின் விலையும் எட்டாத உயரத்தில் தான் இருக்க வேண்டும்.

ஆனால், மதுவின் விலை அதிகமாக இருந்தால் கள்ளச்சாராயத்தை தேடி மக்கள் செல்வார்கள் என்று கூறி குறைந்த விலையில் காகிதக்குடுவைகளில் மதுவை அறிமுகம் செய்வதை அனுமதிக்க முடியாது. தமிழ்நாட்டில் 1948 முதல் 1972 வரை கால் நூற்றாண்டாக மதுவின் வாடையை அறியாமல் ஒரு தலைமுறை வளர்ந்த நிலையில், 1972ம் ஆண்டில் மதுவிலக்கை ரத்து செய்து இளம் தலைமுறைகளை கெடுத்தவர் என்ற பழி கலைஞர் மீது விழுந்திருக்கிறது. இப்போது கையடக்க காகிதக் குடுவைகளில் மதுவை அறிமுகம் செய்து பள்ளிக் குழந்தைகளையும், சிறுவர்களையும் கெடுத்தவர் என்ற பழியும், அவப்பெயரும் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. எனவே, இத்திட்டத்தை கைவிட வேண்டும்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பது தான் அரசின் நோக்கம் என்று தமிழக அரசு கூறுகிறது. ஆனால், அந்த இலக்கை எட்டுவதற்காக தமிழக அரசின் திட்டங்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன. ஒருபுறம் கள்ளச்சாராயத்தை தடுக்கும் நோக்குடன், கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபடும் வணிகர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கும் நோக்குடன் மதுவிலக்கு சட்டத்தை நேற்று தான் திருத்தியுள்ளது. மறுபுறம் காகிதக் குடுவையில் மது விற்பனை செய்யும் திட்டமிடுகிறது என்றால், மது விலக்கு சட்டத்தை கடுமையாக்கியதன் மூலம் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இல்லையா?

கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழக அரசுக்கு இருந்தால் பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளை அழைத்து அரசு ஆலோசனை நடத்த வேண்டும். இது தொடர்பாக ஆயிரமாயிரம் ஆக்கப்பூர்வ ஆலோசனைகளை வழங்க பா.ம.க. தயாராக இருக்கிறது. அதை விடுத்து மலிவு விலை காகிதக் குடுவை மது போன்ற போகக்கூடாத ஊருக்கு தமிழக அரசு வழிகாட்டக் கூடாது.

கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்தால், அதை சாத்தியமாக்க மன உறுதியும், அரசியல் துணிச்சலும் தான் தேவை. மாறாக, காகிதக் குடுவையில் மதுவிற்பனை செய்யும் அபத்தமான, ஆபத்தான திட்டங்கள் தேவையில்லை. எனவே, காகிதக் குடுவையில் 90 மி.லி. மதுவை விற்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். அத்துடன் தமிழ்நாட்டில் முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.




## பா.ரஞ்சித் தயாரித்துள்ள 'பாட்டல் ராதா' படத்தின் டீசர் வெளியானது

இயக்குனர்பா.ரஞ்சித்நீலம்புரொடக்சன்ஸ்சார்பில்தயாரித்துள்ளதிரைப்படம் 'பாட்டல் ராதா'. தினகரன் சிவலிங்கம் இயக்கியுள்ள இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. இந்த படத்தில் குரு சோமசுந்தரம், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு ரூபேஷ் ஷாஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு நிரம்பிய எமோஷனல் ரோலர்கோஸ்டராக இந்த படம் இருக்கும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தின் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. இந்த டீசரைநடிகர்கள்சிம்பு மற்றும் ஆர்யாதங்களுடைய சமூக வலைதளபக்கங்களில் வெளியிட்டனர். இந்த டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## பிரபு தேவாவுடன் இணையும் 'ஜோ' பட நடிகை



இந்திய மைக்கேல் ஜாக்சன் என ரசிகர்களால் கொண்டாடப்படுபவர் நடிகர் பிரபு தேவா. இவர் தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' படத்தில் நடித்து வருகிறார். இப்படம் செப்டம்பர் மாதம் வெளியாக உள்ளது. விரைவில் இவர் நடித்துள்ள 'பேட்ட ராப்' படமும் வெளியாக உள்ளது.

இந்தப் படங்களைத் தொடர்ந்து அவர் நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்தப் படத்துக்கு 'சிங்காநல்லூர் சிக்னல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தில் 'ஜோ' பட நடிகை பாவ்ய திரிகா கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் மலையாள நடிகரான ஷைன் டாம் சாக்கோ மற்றும் ஸ்ரீமன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்க உள்ளனர். இந்த படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

இந்தப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில், பிரபு தேவா டிராபிக் போலீஸ் உடையில் இருக்கிறார். இதன் மூலம் இப்படத்தில் இவர் டிராபிக் போலீசாக நடிக்கிறார் என்பது தெரிகிறது.

## 'கல்கி 2898 ஏடி' வசூல் எவ்வளவு தெரியுமா?



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடித்துள்ள திரைப்படம் 'கல்கி 2898 ஏடி'. 600 கோடி ரூபாய் பட்ஜெட்டில் உருவாகியுள்ள இத்திரைப்படத்தில், அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உள்பட பல பிரபலங்கள்நடித்துள்ளனர். கமல்ஹாசன் வில்லனாக நடித்துள்ளார்.

இதனிடையே, கல்கி திரைப்படம் உலகம் முழுவதும் கடந்த 29ம் தேதி வெளியானது. தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் உள்பட பல்வேறு மொழிகளில் இத்திரைப்படம் வெளியானது.

இத்திரைப்படம் வெளியான முதல் நாளிலேயே 180 கோடி ரூபாய் வசூல் செய்து சாதனை படைத்தது. நேற்று மற்றும் நேற்று முன்தினம் வார விடுமுறை நாட்கள் என்பதால் வசூல் விரைவில் ரூ. 400 கோடியை கடக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி தற்போது, இத்திரைப்படம் இமாலய இலக்கை வெளியான 4 நாட்களில் கடந்துள்ளது. அதன்படி, 'கல்கி 2898 ஏடி' உலகம் முழுவதும் ரூ. 555 கோடி வசூலித்துள்ளது. இதனை இப்படத்தின் தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

## தளபதி 69: மீண்டும் விஜய்க்கு ஜோடியாக சமந்தா?



நடிகர் விஜய், வெங்கட் பிரபு இயக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (தி கோட்) படத்தில் நடித்து இருக்கிறார். இப்படத்தில் விஜய் இரண்டு வேடங்களில் நடித்துள்ளார். செப்டம்பர் மாதம் 5ம் தேதி வெளியாக உள்ள இப்படத்திற்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

அடுத்ததாக நடிகர் விஜய் தனது 69வது படத்தில் நடிக்க உள்ளார். இதுதான் நடிகர் விஜய்யின் கடைசி படமாகும். அதன் பிறகு சினிமாவை விட்டு விலகி முழு நேர அரசியலில் கவனம் செலுத்த இருக்கிறார். தளபதி 69 படத்தை எச்.வினோத் இயக்க உள்ளார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிகை சமந்தா நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு முன்னதாக இருவரும் சேர்ந்து 3 படங்களில் நடித்துள்ளனர். அதன்படி, 2014ல் வெளியான 'கத்தி', 2016ல் வெளியான 'தெறி' மற்றும் 2017ல் வெளியான 'மெர்சல்' ஆகிய படங்களாகும்.

இருவரும் இணைந்து நடித்த இந்த 3 படங்களும் மெகா ஹிட் அடித்தன. இப்போது இந்த படத்தின் மூலம் மீண்டும் இந்த கூட்டணி இணைய உள்ளதால் இதுவும் மெகா ஹிட் ஆகும் என்று ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

## 'தங்கலான்' படத்தின் அப்டேட் கொடுத்த ஜி.வி.பிரகாஷ்



இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எப் குறித்த கதை என்று இயக்குனர் பா.ரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விக்ரமின் தோற்றம் மற்றும் மிரட்டலான நடிப்பு உள்ளிட்டவை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'தங்கலான்'திரைப்படம் ஆகஸ்ட் மாதம் வெளியாகும் என்றுதகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில் 'தங்கலான்' படத்தின் பின்னணி இசைப் பணிகள் முடிவடைந்ததாக இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

'தங்கலான்' படத்தின் பின்னணி இசைப் பணிகள் முடிந்தது. என்னுடைய சிறப்பான உழைப்பை கொடுத்துள்ளேன். படத்தின் ரிலீசுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன். அற்புதமான டிரைலர் விரைவில் வெளியாகி, உங்கள் மனதைக் கவரும். இந்திய சினிமா 'தங்கலான்' படத்துக்கு தயாராகுங்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## யோகி பாபுவின் சட்னி சாம்பார் தொடர் ஓடிடி குறித்த அறிவிப்பு




தமிழ் சினிமாவில் முன்னணி நகைச்சுவை நடிகராக வலம் வருபவர் யோகிபாபு. இவர் நடிப்பில் வெளியான கோலமாவு கோகிலா, மண்டேலா, ஜெய்லர் உள்ளிட்ட திரைப்படங்கள் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றன.

இதனைத் தொடர்ந்து கடந்த வருடம் அட்லீ இயக்கத்தில் வெளியான 'ஜவான்' படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமானார். மேலும் சமீபத்தில் வெளியான குருவாயூர் அம்பலநடையில் படத்தில் நடித்து மலையாளத்திலும் அறிமுகமானார்.

இந்த நிலையில் யோகி பாபு தற்போது, 'சட்னி சாம்பார்' என்ற தொடரிலும் நடித்து வருகிறார். இந்த தொடரில் அவர் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்கிறார். வாணி போஜன், மைனா நந்தினி, தீபா சங்கர், சம்யுக்தா விஸ்வநாத் , அகிலன் மற்றும் கேசவ் ராஜ் ஆகியோரும் இதில் நடிக்கின்றனர்.

இந்தத் தொடரை இயக்குனர் ராதாமோகன் இயக்குகிறார்.

இந்த நிலையில், சட்னி சாம்பார் தொடர் ஓடிடியில் வெளியாவது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த தொடர் விரைவில் டிஸ்னி ஹாட்ஸ்டாரில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லங்கா பிரீமியர் லீக்: சாப்மேன், விக்ரமசிங்கே அதிரடி...தம்புல்லா சிக்சர்ஸ் 179 ரன்கள் குவிப்பு



இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். போன்று பல நாடுகளில் பல்வேறு தொடர்கள் நடத்தப்படுகின்றன. அதன்படி இலங்கையில் லங்கா பிரீமியர் லீக் நடத்தப்படுகிறது. இதுவரை 4 சீசன்கள் முடிவடைந்த நிலையில்,தற்போது 5வது சீசன் இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்று வரும் முதல் லீக் ஆட்டத்தில் வனிந்து ஹசரங்கா தலைமையிலான கண்டி பால்கன்ஸ் அணியும், முகமது நபி தலைமையிலான தம்புல்லா சிக்சர்ஸ் அணியும் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற கண்டி பால்கன்ஸ் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

இதையடுத்து தம்புல்லா சிக்சர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக தசுன் குணதிலகா, குசல் பெராரே ஆகியோர் களம் இறங்கினர். இதில் பெரேரா 0 ரன், குணதிலகா 11 ரன் அடுத்து களம் இறங்கிய பெர்ணாண்டோ 4 ரன், தவ்ஹித் ஹ்ரிடொய் 1 ரன் எடுத்து அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் அந்த அணி 25 ரன்னுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இதையடுத்து மார்க் சாப்மேன் மற்றும் சமிந்து விக்ரமசிங்கே இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். அரைசதம் அடித்த பின்னர் அதிரடி ஆட்டத்தை வெளிபடுத்திய இந்த இணை மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்டது.

இறுதியில் தம்புல்லா சிக்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 179 ரன்கள் குவித்தது. தம்புல்லா சிக்சர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக மார்க் சாப்மேன் 91 ரன்னும், சமிந்து விக்ரமசிங்கே 62 ரன்னும் எடுத்து களத்தில் இருந்தனர். கண்டி பால்கன்ஸ் தரப்பில் தசுன் ஷனகா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கண்டி பால்கன்ஸ் அணி ஆட உள்ளது.

## ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: ஜார்ஜியாவை வீழ்த்தி ஸ்பெயின் காலிறுதிக்கு தகுதி



17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் கெலோன் நகரில் நடந்த நாக்அவுட் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சாம்பியனான ஸ்பெயின், ஜார்ஜியாவுடன் மோதியது.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் அணி 41 என்ற கோல் கணக்கில் ஜார்ஜியாவை விரட்டியடித்து காலிறுதிக்கு முன்னேறியது. 18வது நிமிடத்தில் எதிர்பாராவிதமாக எதிரணிக்கு சுயகோல் வழங்கி பின்தங்கிய ஸ்பெயின் அதன் பிறகு தாக்குதலை தீவிரப்படுத்தி கோல் மழை பொழிந்தது. ரோட்ரி, பாபியன் ரூஸ், நிகோ வில்லியம்ஸ், டானி ஆல்மோ ஆகியோர் அந்த அணியில் கோல் போட்டு அசத்தினர்.

## விம்பிள்டன் டென்னிஸ்: 2வது சுற்றுக்கு முன்னேறினார் கார்லஸ் அல்காரஸ்



டென்னிஸ் போட்டியில் ஆண்டுதோறும் 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் மிகவும் கவுரவமிக்கதாக கருதப்படும் நூற்றாண்டு காலம் பழமையான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் இன்று தொடங்கியது.

இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், எஸ்டோனியாவின் மார்க் லஜால் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கார்லஸ் அல்காரஸ் 76 (73), 75, 62 என்ற செட் கணக்கில் மார்க் லஜாலை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.


## லங்கா பிரீமியர் லீக்: சாப்மேன், விக்ரமசிங்கே அதிரடி...தம்புல்லா சிக்சர்ஸ் 179 ரன்கள் குவிப்பு



இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். போன்று பல நாடுகளில் பல்வேறு தொடர்கள் நடத்தப்படுகின்றன. அதன்படி இலங்கையில் லங்கா பிரீமியர் லீக் நடத்தப்படுகிறது. இதுவரை 4 சீசன்கள் முடிவடைந்த நிலையில்,தற்போது 5வது சீசன் இன்று தொடங்கியது. இன்று நடைபெற்று வரும் முதல் லீக் ஆட்டத்தில் வனிந்து ஹசரங்கா தலைமையிலான கண்டி பால்கன்ஸ் அணியும், முகமது நபி தலைமையிலான தம்புல்லா சிக்சர்ஸ் அணியும் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற கண்டி பால்கன்ஸ் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. இதையடுத்து தம்புல்லா சிக்சர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக தசுன் குணதிலகா, குசல் பெராரே ஆகியோர் களம் இறங்கினர். இதில் பெரேரா 0 ரன், குணதிலகா 11 ரன் அடுத்து களம் இறங்கிய பெர்ணாண்டோ 4 ரன், தவ்ஹித் ஹ்ரிடொய் 1 ரன் எடுத்து அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் அந்த அணி 25 ரன்னுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இதையடுத்து மார்க் சாப்மேன் மற்றும் சமிந்து விக்ரமசிங்கே இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். அரைசதம் அடித்த பின்னர் அதிரடி ஆட்டத்தை வெளிபடுத்திய இந்த இணை மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்டது. இறுதியில் தம்புல்லா சிக்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 179 ரன்கள் குவித்தது. தம்புல்லா சிக்சர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக மார்க் சாப்மேன் 91 ரன்னும், சமிந்து விக்ரமசிங்கே 62 ரன்னும் எடுத்து களத்தில் இருந்தனர். கண்டி பால்கன்ஸ் தரப்பில் தசுன் ஷனகா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கண்டி பால்கன்ஸ் அணி ஆட உள்ளது.


## இந்தியாவுக்கு எதிரான டி20 தொடர்: சிக்கந்தர் ராசா தலைமையில் களம் இறங்கும் ஜிம்பாப்வே




இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 6ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி சுப்மன் கில் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணியில் கெய்க்வாட், ஜெய்ஸ்வால், ரியான் பராக், துருவ் ஜூரெல், துஷார் தேஷ்பாண்டே உள்ளிட்ட இளம் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இந்த தொடருக்கான ஜிம்பாப்வே அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடருக்கான ஜிம்பாப்வே அணிக்கு சிக்கந்தர் ராசா கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் நக்வி அறிமுக வீரராக இடம் பெற்றுள்ளார்.

ஜிம்பாப்வே அணி விவரம்: சிக்கந்தர் ராசா (கேப்டன்), பராஸ் அக்ரம், பிரையன் பென்னட், ஜொனாதன் கேம்ப்பெல், டெண்டாய் சதாரா, லூக் ஜாங்வே, இன்னசென்ட் கையா, கிளைவ் மடாண்டே, வெஸ்லி மாதேவெரே, தடிவானாஷே மருமணி, வெலிங்டன் மசகட்சா, பிராண்டன் மவுடா, பிளெசிங் முசரபானி, டையன் மையர்ஸ், ஆண்டம் நக்வி, ரிச்சர்ட் ங்கராவா, மில்டன் ஷும்பா.



நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து

**விளக்கம்:**

பயனோடு பொருந்தாத பண்பு இல்லாத சொற்களைப் பலரிடத்தும் சொல்லுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மையிலிருந்து நீங்கச் செய்யும்.


நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041


Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.